தாகக் குறிப்பிட்டிருந்தார்கள், ஆனால், இன்றைக்குப் பார்த்தால் அந்தப் பெயர் பற்றி ஒன்றுமே இல்லை. திராவிட இயக்கத்தினுடைய மூன்றாவது தலைமுறையை உருவாக்கிய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை ஈன்றெடுத்த அந்த அன்னையாருடைய பெயரை வைக்க வேண்டும். அதேபோல், எங்களுடைய சிறிய ஆசையையும் இந்த நேரத்திலே அமைச்சரிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நூற்பாலையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பெயரை வைக்கின்ற நேரத்திலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வினுடைய அனைத்துத் தொண்டர்களும் அதிலே பங்கு எடுத்துக் கொண்டு, ஷேர் போட்டு அவர்களும் சேர்ந்து இயக்கக்கூடிய அளவுக்கு ஒரு வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, திருப்பூர் நகரத்தினுடைய பனியன் காடா துணிகளுடைய ஏற்றுமதியைத் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்தத் தொழில் சிறப்பு சேர்க்கக்கூடிய அளவுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருகிற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த— இந்தக் கொள்கைக்குறிப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

6. விதி 110-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

பாடப் புத்தகங்கள் பயன்படுத்தப்படாமல் அதிக அளவில் தேங்கிக் கிடப்பதாக 5-4-1992 ஆம் நாளைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துள்ள தவறான செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை இப்போது அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-1992 நாளிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளில் 3.5 கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் ஒரே பதிப்பாளரிடமிருந்து ஒப்பந்தப் புள்ளி கோரப்படாமல் பள்ளிக் கல்வி இயக்குநரால் வாங்கப்பட்டு உபயோகப் படுத்தப்படாமல் போரூரில் உள்ள கிடங்கு ஒன்றில் வைக்கப் பட்டுள்ளதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அச்செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. பள்ளிக் கல்வி இயக்குநரால் 3.5 கோடி ரூபாய் மதிப்பிற்கு ஒரே பதிப்பாளரிடமிருந்து புத்தகங்கள் வாங்கப்படவில்லை. போரூரில் புத்தகக் கிடங்கும் இல்லை.

1992 ஏப்ரல் 7] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

மைய அரசின் முழு உதவியுடன் செயல்பட்டுவரும் அறிவியல் கல்வி முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 1987–88-ல் 83.55 லட்சம் நிதி உதவி பெறப்பட்டு 82.47 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் இதற்கு முன்னாலே இருந்த அரசு 180.6 லட்சம் நிதி உதவி பெறப்பட்டு 167.08 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1990–91 இல் மூன்றாவது கட்டத்தில் 35.02 லட்சம் ரூபாய் உதவி பெறப்பட்டு புத்தகங்கள் தேர்வுக்காக அறிவிப்பு செய்த செய்தி, செய்தித்தாளில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட செய்தியில் வேறு சில குற்றச்சாட்டுகளும் கூறப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில், வெளிநாட்டில் அச்சிடப்பட்டு எசன்ஷியல் சைன்ஸ் பிசிக்ஸ் என்ற புத்தகத்தினை சப்ளை செய்வதற்காக வெளியீட்டாளர், வெளிநாட்டு விலைப் பட்டியலைக் கொடுத்துவிட்டு புத்தகங்களை வெளிநாட்டிலிருந்து பெறாமல் உள்நாட்டிலேயே அச்சிட்டு சப்ளை செய்த வகையில் பெரும் அளவுக்கு லாபம் ஈட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, ஒப்பந்தப்புள்ளி பெறாமல் புத்தகங்கள் வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுகள் இவ்வரசு பதவிக்கு வந்ததற்கு முன் நிகழ்ந்தவையாகும். இக்குற்றங்கள் குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

5. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கைத்தறி மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக கூட்டுறவுத் தேர்தல் மே மாதம் நடைபெறும் என்று அறிவித்திருந்தாலும், எந்தவிதக் காரணமும் காட்டி தள்ளிப் போடாமல் அந்தத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தேர்தல் என்று கூறுகின்றபோது அந்தச் சங்கங்களிலே எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் அந்தத் தொழிலே தெரியாமல் பல நபர்கள் எல்லாம் இன்றையதினம் அதில் அங்கத்தினர்களாக புகுத்தப்பட்டு வருவதாக அறிகிறேன். அதை அரசு விசாரித்து அதுபோன்ற